# ஸ்ரீ காமாக்ஷீ து:க்க நிவாரண அஷ்டகம்

*மங்கள ரூபிணி மிதி அணி ஸூலினி மன்மத பாணியளே*
*சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும் ஸங்கரி ஸௌந்தரியே*
*கங்கண பாணியன் கனிமுகம் கண்டநல் கற்பகக் காமினியே*
*ஜய ஜய ஸங்கரி கௌரி க்ருபாகரி து:க்க நிவாரணி காமாக்ஷி* 1

*கான் உறுமலர் எனக்கதிர் ஒளி காட்டிக் காத்திட வந்திடுவாள்*
*தான்உறு தவஒளி தார்ஒளி மதிஒளி தாங்கியே வீசிடுவாள்*
*மான்உறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்*
*ஜய ஜய ஸங்கரி கௌரி க்ருபாகரி து:க்க நிவாரணி காமாக்ஷி* 2

*ஸங்கரி ஸௌந்தரி சதுர்முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே*
*பொங்கு அரிமாவினில் பொன்னடி வைத்துப் பொருத்திட வந்தவளே*
*என்குலம் தழைத்திட எழல் வடிவுடனே எழுந்தநல் துர்கையளே*
*ஜய ஜய ஸங்கரி கௌரி க்ருபாகரி து:க்க நிவாரணி காமாக்ஷி* 3

*தணதண தந்தண தவில்ஒலி முழங்கிடத் தண்மணி நீ வருவாய்*
*கணகண கங்கண கதிர்ஒலி வீசிடக் கண்மணி நீ வருவாய்*
*பணபண பம்பண பறைஒலி கூவிடப் பண்மணி நீ வருவாய்*
*ஜய ஜய ஸங்கரி கௌரி க்ருபாகரி து:க்க நிவாரணி காமாக்ஷி* 4

*பஞ்கமி பைரவி பர்வத புத்திரி பஞ்சநல் பாணியளே*
*கொஞ்சிடும் குமரனைக் குணம்மிகு வேழனைக் கொடுத்தநல் குமரியளே*
*சங்கடம் தீர்த்திடச் சமர் அது செய்தநல் சக்தி எனும் மாயெ*
*ஜய ஜய ஸங்கரி கௌரி க்ருபாகரி து:க்க நிவாரணி காமாக்ஷி* 5

*எண்ணியபடி நீ அருளிட வருவாய் என்குல தேவியளே*
*பண்ணிய செயலின் பலனது நலமாய்ப் பல்கிட அருளிடுவாய்*
*கண்ணொளி அதனால் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே*
*ஜய ஜய ஸங்கரி கௌரி க்ருபாகரி து:க்க நிவாரணி காமாக்ஷி* 6

*இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை என்றுநீ சொல்லிடுவாய்*
*சுடர்மரு அமுதே சுருதிகள் கூறிச் சுகமது தந்திடுவாய்*
*படர்தரு இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்*
*ஜய ஜய ஸங்கரி கௌரி க்ருபாகரி து:க்க நிவாரணி காமாக்ஷி* 7

*ஜயஜய பால சாமுண்டேஸ்வரி ஜயஜய ஸ்ரீதேவி*
*ஜயஜய துர்க்கா ஸ்ரீ பரமெஸ்வரி ஜயஜய ஸ்ரீதேவி*
*ஜயஜய ஜயந்தி மங்களகாளி ஜயஜய ஸ்ரீதேவி*
*ஜய ஜய ஸங்கரி கௌரி க்ருபாகரி து:க்க நிவாரணி காமாக்ஷி* 8